**Dated : 04.02.2026**

**C.O.S. No. 2/2023**

**PW.1 – திரு. விஜயராம்**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

ஒப்பந்தத்தில் யாருடைய பெயர் காணப்படுகிறது என்றால் விஜயராம் என்ற பெயரில் தான் காணப்படுகிறது. ஒப்பந்தத்தை உங்களுடைய பெயரில் போட்டுள்ளீர்கள், ஆனால் கம்பெனி பெயரில் தான் போட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. சுவேதா பில்டர்ஸ் நான் செயல்படுவதற்கு எனக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறார்களா என்றால் வழங்கியுள்ளார்கள். அந்த அதிகார ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. இந்த ஒப்பந்தத்தில் கீழ் தளம், முதல் தளம் ஆகியவற்றை கட்டுவதற்கு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேனா என்றால் கீழ் தளத்தை முடித்து கொடுப்பதற்கு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டுள்ளோம், மேற்கொண்டு ஏதேனும் வேலைகள் செய்ய வேண்டியிருந்தால் அதையும் ஒப்பந்தம் போட்டிருக்கிறோம். மேல்தளம் கட்டுவதற்கு நாங்கள் ஏதேனும் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோமா என்றால் வாய்மொழியாக பேசிக்கொண்டோம், வாய்மொழியாக எந்த ஒப்பந்தமும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் தற்போது காட்டப்படும் ஆவணத்தில் உள்ளது தான், ஒப்பந்தமா அல்லது பொதுவாக மாதிரி படிவம் ஏதேனும் பயன்படுத்துகிறோமா என்றால் அந்த இடங்களுக்கு ஏற்றவாறு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்வோம்.

நாங்கள் சொன்ன மாதிரியே அதே தரமான சிமெண்ட், கம்பி, கதவு, மரம் ஆகியவற்றை பயன்படுத்தியிருக்கிறோமா என்றால் ஒப்பந்தத்தில் உள்ளவாறு பயன்படுத்தியிருக்கிறோம். அதுபோன்று புதிய பொருட்களை பயன்படுத்தாமல், பழைய பொருட்களை பயன்படுத்தி அவற்றை புதுப்பித்து கட்டியிருக்கிறேன் என்றால் அது தவறு. நான் தரமற்ற பொருட்களை பயன்படுத்திய காரணத்தினால் கட்டிடத்தில் விரிசல்கள் ஏற்பட்டிருக்கிறது என்றால் அது தவறு. என்னுடைய Legal Notice–ம், மனுவிலும் சிவில் இஞ்சினியர் என்று காட்டியுள்ளேனே அது சரியா என்றால் இஞ்சினியர் என்று காட்டியுள்ளேன். சிவில் இஞ்சினியர் என்று தாக்கல் செய்த மனுவில், பிராதிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் E.R. என்று போட்டாலே இஞ்சினியர் என்று அர்த்தம். நான் E.R. என்று போடவில்லை சிவில் இஞ்சினியர் என்று போட்டிருக்கிறேன் என்றால் தற்போது எனக்கு அதை பற்றி ஞாபகமில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பமிட்டேன் என்றால் படித்து பார்த்து தான் கையொப்பமிட்டேன், ஆனால் வருடங்கள் கடந்ததால் எனக்கு

தற்போது நினைவில்லை. Legal Notice–ம், நான் தாக்கல் செய்த மனுவிலும் சிவில் இஞ்சினியர் என்று காட்டியுள்ளேன், அது சரியா, தவறா என்றால் அது சரிதான். நான் சிவில் இஞ்சினியர் படித்திருக்கிறேன் என்பதை காட்டுவதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்கிறேன்.

நான் டிப்ளோமோ EEE படித்துள்ளேன், சிவில் இஞ்சினியர் படிக்கவில்லை, நான் நீதிமன்றத்தில் பொய்யாக கூறுகிறேன் என்றால் இரண்டும் படித்திருக்கிறேன். ஆதார் காட்டிலும், கல்வி சான்றிதலும் என்னுடைய பெயர் என்ன என்று குறிப்பிட்டுள்ளது என்றால் விஜயராம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் எவ்வளவு தொகை என்னென்ன தவணைகளில் வாங்கியிருக்கிறேன் என்றால் தவணை முறையில் சுமார் ரூ.22,00,000/– பணம் வாங்கியிருக்கிறேன். எத்தனை முறை பணம் வாங்கியிருக்கிறேன் என்றால் நான் ஒவ்வொரு முறை பணம் வாங்கும் போதும் அதில் கையொப்பமிட்டு தான் வாங்குவேன், நான் சுமார் 6 – 7 தவணைகளாக பணம் பெற்றிருந்திருப்பேன். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பது கலர் ஜெராக்ஸ் தான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் வீட்டு உரிமையாளர் தான் அதனுடைய அசலை வைத்திருப்பார், நாங்கள் அந்த அசல் ஆவணத்தில் பணத்தை வாங்கும் போது கையொப்பமிட்டு கொடுப்போம். இந்த ஒப்பந்தத்தை தயாரித்தது நான் தான் என்றால் இருவரும் சேர்ந்து தான் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம். இதில் கண்டுள்ள சங்கதிகள் யார் தயாரித்தது என்றால் இருவரும் கலந்து பேசி தான் தயார் செய்தோம். இந்த ஒப்பந்தத்தை தயார் செய்வதற்கான ஆவணத்தை யார் வாங்கியது என்றால் இருவம் சேர்ந்து என்னுடைய பெயரில் வாங்கினோம்.

இதில் சுவேதா பில்டர்ஸ் என்று தான் ஒப்பந்தத்தில் பெயர் காணப்படுகிறது என்றால் சரிதான். இது எல்லாமே நான் தான் வாங்கினேன், நான் தான் ஆவணத்தை தயார் செய்தேன், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதே போல அசல் ஒப்பந்தமும் என்னிடம் தான் உள்ளது என்று சொன்னால் அது தவறு, வீட்டு உரிமையாளரிடம் தான் உள்ளது. என்னிடம் தற்போது காட்டப்படும் ஆவணத்தில் 1 லிருந்து 11 எண் வரை உள்ள விவரங்கள் எல்லாம் என்னுடைய கையொப்பம் தான், 12 ஆக காட்டப்பட்டிருக்கும் விவரம் என்னுடைய கையொப்பமே அல்ல. அந்த எழுத்தும் என்னுடையதல்ல, 12வது உள்ள கையொப்பமும் என்னுடையதல்ல. இந்த விவரங்களை மறைப்பதற்காக தான் நான் நீதிமன்றத்தில் கலர் ஜெராக்ஸ் கொடுத்திருக்கிறேன் என்றால் எப்போதுமே உரிமையாளரிடம் தான் அசல் ஆவணம் இருக்கும், என்னிடம் கலர் ஜெராக்ஸ் தான் வைத்திருப்பேன். கட்டுமானத்தை பொருத்தவரை இருதரப்பினர்களுமே அதற்கான ஒப்பந்தங்கள்

இருக்கும் என்று சொன்னால் வீட்டு உரிமையாளரிடம் மட்டும் தான் இருக்கும். ஒப்பந்த பத்திரம் என்றாலே இருதரப்பினரிடமும் அதற்கான ஆவணங்கள் காணப்படும் என்றால் சரியல்ல.

11 தவணைகளாக நான் எவ்வளவு பணம் வாங்கியிருக்கிறேன் என்றால் சுமார் ரூ.22,00,000/– வாங்கியிருக்கிறேன். அதற்கு பின்னிட்டும் நான் ரூ.11,90,000/– 26.06.2021 அன்று வரை பெற்றிருக்கிறேன் என்றால் அது சரியல்ல, இவ்வழக்கிற்காக வேண்டி போலீயான ஆவணத்தை தயார் செய்திருக்கிறார்கள். நான் தான் ஆவணத்தை மறைத்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வேலையை நான் எந்த தேதியில் துவக்கினேன் என்றால் சுமார் 05.02.2020 ஆக இருக்கலாம், அது புதன் கிழமையாகும். எப்போது நான் வேலையை விட்டு வெளியேறினேன் என்றால் 2வது கொரோனாவிற்கு பின்னிட்டு தான் நிறுத்தினேன், அதற்கு முன்னர் 80 சதவீத வேலை முடித்திருந்தேன் என்றால் அதற்கான வருடமும், மாதமும் என்ன என்றால் அது நினைவில்லை. 80 சதவீதம் பணிகள் முடிந்துவிட்டதாக Ex.A2–ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது, அந்த நிறுவனம் அதனுடைய உரிமையாளர் பெயர் குறிப்பிட முடியுமா என்றால் கட்டுமான சங்கத்தின் மூலமாக ஒரு பொறியாளரை வைத்து மதிப்பீடு செய்தேன், அவருடைய பெயர் தற்போது ஞாபகமில்லை.

அந்த பொறியாளருடைய கம்பெனி பெயர் ஞாபகமிருக்கிறதா என்றால் ராஜ் Construction என்று நினைக்கிறேன், உறுதியாக கூறமுடியாது. அந்த ரிப்போர்ட்டை எந்த தேதியில் வாங்கியதாக ஞாபகமிருக்கிறதா என்றால் வழக்கு தொடுத்த தேதியில் வாங்கினேன், தேதி ஞாபகமில்லை. லைசன்ஸ் பில்டிங் சர்வேயர் எப்போது பார்வையிட சென்றார்கள், அவருடன் கூட இருந்தவர்கள் யார் என்றால் சர்வேயர் பெயர் ஞாபகமில்லை, அந்த வீட்டின் உரிமையாளர்கள் அங்கிருந்தார்கள். அதுபோல எந்த நிகழ்வும் நடக்கவில்லை, வழக்கிற்காக வேண்டி நான் பொய்யாக சொல்கிறேன், அதுபோல போட்டோ இருந்தால் நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் 40 சதவீத பணியை தான் முடித்திருந்தேன், 80 சதவீத பணியை முடித்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் தவறு, 80 சதவீதம் முடித்திருந்தேன். இது சம்மந்தமாக பஞ்சாயத்து பேசப்பட்டதா என்றால் பஞ்சாயத்து பேசப்பட்டது, பஞ்சாயத்தார்கள் கொடுத்த முடிவினை உரிமையாளர் ஒத்துக்கொள்ளாமல், தற்கொலை செய்துக்கொள்வதாக கோவிலிருந்து சென்றவுடன் அனைவரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள்.

அதுபோல சம்பவம் நடக்கவில்லை, நான் தான் பஞ்சாயத்தார் பேசிக்கொண்டிருக்கும் போதே அங்கிருந்து வெளியேறிவிட்டேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்தை கூட்டியது யார் என்றால் இரண்டு தரப்பினரும் சேர்ந்து தான் கூட்டினோம். பஞ்சாயத்திற்கு நாங்கள் தான் உங்களை வரவழைத்தோம் என்றால் சரியல்ல. இதை மீறி நீங்கள் சென்றதால் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. இதே போல கிருஷ்ணன் மற்றும் பிருந்தா ஆகியோருக்கும் பாதியிலேயே வேலை நிறுத்திவிட்டு அவர்களிடம் பணம் வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இதே போல குருபரப்பள்ளி காவல் நிலையத்தில் என் மீது முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டிருக்கிறது என்றால் இல்லை. இதே போல பல இடங்களில் பணத்தை பெற்றுக்கொண்டு வேலை பார்க்காமல் செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் தரப்பினருக்கு தான் நீங்கள் பணம் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல, எனக்கு தான் பணம் வரவேண்டும். Building Construction-ல் யாரும் பணம் போட்டு வேலையை பார்க்கமாட்டார்கள், பணத்தை பெற்றுக்கொண்டு தான் வேலை பார்ப்பார்கள் என்றால் நான் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தின் படி தான் செயல்பட்டேன், அத்துடன் அல்லாது கொரோனா நேரத்திலும் என் பணத்தை போட்டு வேலை பார்த்தேன்.

நான் பொய்யாக சொல்கிறேன், கொரோனா சமயத்தில் யாரும் பணம் போட்டு வேலை செய்யமாட்டார்கள் என்றால் அது தவறு. எங்களுடைய பொறியாளர் 40 சதவீத பணியை தான் மேற்கொண்டிருக்கிறார் என்று கூறியிருக்கிறார், அது சம்மந்தமாக சாட்சியம் அளிக்கவும் தயாராக இருக்கிறார் என்றால் அது அவருடைய விருப்பம். வழக்கிற்காக வேண்டி 80 சதவீத பணியை முடித்ததாக மிகைப்படுத்தி பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பலமுறை என்னை பணியை மேற்கொள்ள வேண்டி அணுகிய போதும், நான் அந்த பணியை மேற்கொள்ளாத காரணத்தினால் மிகவும் சிரமப்பட்டு வேறு ஒரு பொறியாளரை நியமித்துக்கொண்டு பணியை முடித்தார்கள் என்று சொன்னால் முற்றிலும் தவறு. எதிர்மனுதாரர் தரப்பில் தான் மிகுந்த கஷ்டப்பட்டிருக்கிறார்கள் என்றால் அது பொய்.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R — Digitally signed by LATHA V R

Principal District Judge,

Krishnagiri.